Incentive Increments to Physical Training Instructors.

*193 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that, as per G.O. Ms. No. 42, Education, dated 10–1–1969, two incentive increments are given to those Physical Training Instructors, Grade–I, who have passed Diploma in Physical Education; and

(*b*) if so, whether Instructors who have passed B.P.Ed., will be given the same?

உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊக்கச் சம்பள உயர்வு.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) உடற்பயிற்சிக் கல்வி தகுதிப் பட்டையத் தேர்வில் தேர்ச்சியடைந்த முதல்தர உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, கல்வித்துறையைச் சேர்ந்த 10—1—1969ஆம் நாளிட்ட 42ஆம் அரசாணையின்படி இரண்டு ஊக்கச் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், உடற்பயிற்சிப் பட்டப் படிப்பில் தேர்வு பெற்றுள்ள உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் அவ்வாறு சம்பள உயர்வு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இப்பொருள்மீது தமது கருத்துரை அரசுக்கு அனுப்புவதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். அக்கருத்துரு பெறப்பட்டதும் அதன்மீது தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ்: தலைவரவர்களே, அரசு ஆணை 42ல் "டிப்ளமா இன் எஜுகேஷன்" பெற்றிருந்தால் இரண்டு ஊக்க ஊதியம் கொடுக்கலாமென்று இருக்கிறது. ஏறத்தாழ அதற்கு ஏற்ற வகையிலே அந்தத் தகுதி உடையதாகத்தான் "பேச்சலர் ஆப் பிசிகல் எஜுகேஷன்" இருப்பதனால், அவர்களுக்கும் இந்த இரண்டு ஊக்க ஊதியம் அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநர் அந்த அளவுக்கு அவர்களுடைய பரிந்துரையைச் செய்திருக்கிறார்கள். அரசின் பரிசீலனையில் இது இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.